
என் விண்ணப்பத்தில்
என் சத்தத்தைக் கேட்டருளும்

64 சங்கீதம்

என் விண்ணப்பத்தில் என் சத்தத்தைக் கேட்டருளும் - தேவனே
என் சத்துருவால் வரும் பயத்தை நீக்கிவிடும்
துன்மார்க்கர் செய்யும் இரகசிய ஆலோசனைக்கு விலக்கிடும் - அக்கிர
மக்காரருடைய கலகத்துக்கு என்னை மறைத்திடும்

மறைத்திடும் விலக்கிடும் நீக்கிடும் என்னை கேட்டருளும்
கேட்டருளும் நீக்கிவிடும் விலக்கி என்னை மறைத்திடும்

தங்கள் நாவைப் பட்டயம் போல் கூர்மையாக்கி
மறைவுகளில் உத்தமன் மேல் அம்பெய்தனர்
தங்கள் கசப்பான வார்த்தைகளை நாணேற்றினர்
சற்றும் பயமின்றி சடுதியாய் என்னைத் தாக்கினர் (மறைத்திடும் என்)

தங்கள் பொல்லாத காரியத்தால் உறுதிப்படுத்தினர்
மறைவான கண்ணிகளை வைக்க எண்ணினர்
தங்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்து தேடினர்
தந்திரமான யோசனை நிறைவேற்றத் துடித்தனர் (மறைத்திடும் என்)

தேவன் அவர்கள் மேல் அம்புகளை எய்வார்
சடுதியாய் அவர்களை காயப்படுத்துவார்
அவர்கள் தன்னைப்பற்றி கேடு விளைத்து ஓடிப் போவார்கள்
நீதிமானோ கர்த்தரில் மகிழ்ந்து போற்றுவான் (என்)

KJC-DNN

